# அமீரகம்-ஓமன் செய்திகள்



சினிமா செய்திகள்
10-ம் பக்கம்

## கண்காட்சியை பார்வையிட்ட இந்திய மாணவர்கள்



சார்ஜா புத்தகக் கண்காட்சியில் அமைந்துள்ள இந்திய கல்வித்துறை அமைச்சகத்தின் தேசிய புத்தக நிறுவனம் டிரஸ்ட் அரங்கை இந்திய மாணவ, மாணவிகள் பார்வையிட்டு குழு புகைப்படம் எடுத்து கொண்ட காட்சி.

## மஸ்கட்டில், கட்டிடம் இடிந்து ஒருவர் படுகாயம்

### மற்றொருவர் பத்திரமாக மீட்பு

மஸ்கட், நவ.18-

ஓமன் தீயணைப்பு மற்றும் ஆம்புலன்ஸ் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

மஸ்கட்டில் கட்டிடம் ஒன்று திடீரென்று இடிந்து விழுந்து விபத்தில் சிக்கியது. இதுகுறித்து அந்த பகுதியில் வசித்தவர்கள் போலீஸ் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவித்தனர். இந்த தகவலின் பேரில், மீட்பு குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். அவர்கள் இடிபாடுகளில் சிக்கியவர்களை உயிருடன் மீட்டனர். அதில் ஒருவர் படுகாயம் அடைந்தார். அவருக்கு தேவையான முதலுதவி சிகிச்சை ஆம்புலன்ஸ் மூலம் அளிக்கப்பட்டு அருகில் உள்ள ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். மற்றொருவர் எந்தவிதமான பாதிப்பும் இல்லாமல் மீட்கப்பட்டார். இந்த சம்பவம் தொடர்பாக ராயல் ஓமன் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளது.

## வாழ்த்து



அஜ்மான் அல் சபா அரண்மனையில் அஜ்மான் ஆட்சியாளரின் நிர்வாக மற்றும் நிதித்துறை பிரதிநிதி ஷேக் அகமது பின் ஹுமைத் அல் நுயைமி இல்ல திருமண விழாவில் துபாய் பட்டத்து இளவரசரும், துணை பிரதமரும், பாதுகாப்புத்துறை மந்திரியும், துபாய் நிர்வாக கவுன்சில் தலைவருமான மேதகு ஷேக் ஹம்தான் பின் முகம்மது பின் ராஷித் அல் மக்தூம், அஜ்மான் பட்டத்து இளவரசரும், நிர்வாக கவுன்சில் தலைவருமான மேதகு ஷேக் அம்மார் பின் ஹுமைத் அல் நுயைமி உள்ளிட்டோர் மணமகனை வாழ்த்தி குழு புகைப்படம் எடுத்துக்கொண்ட காட்சி.

கடலில் குளித்து கொண்டிருந்த போது பரிதாபம்:

# துபாயில், ராட்சத அலையில் சிக்கி மாணவர் சாவு

## சகோதரி உயிருடன் மீட்பு

துபாய், நவ.18-

துபாயில், கடலில் குளித்து கொண்டிருந்த மாணவர் ராட்சத அலையில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்தார். அவனது சகோதரியை மீட்பு படையினர் உயிருடன் மீட்டனர்.



### மாணவர் சாவு

துபாய் அல் மம்சார் பகுதியில் கடற்கரை அமைந்துள்ளது. இந்த பகுதியில் பொது மக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் சுற்றி பார்ப்பதும், கடலில் உற்சாகமாக குளித்து செல்வது வழக்கம். இந்த நிலையில் முகமது அஷ்ரப் என்பவர் அவரது மகன் அகமது அப்துல்லா மபாஸ் (வயது 15), மகள் மற்றும் குடும்பத்தினருடன் கடற்கரைக்கு வந்து இருந்தனர்.

இதில், அகமது அப்துல்லா மபாஸ், துபாயில் உள்ள நியூ இந்தியன் மாதிரி பள்ளிக்கூடத்தில் 10-ம் வகுப்பு படித்து வந்தார். பெற்றோருடன் சிறுவன் கடல் அலையில் விளையாடி கொண்டிருந்தனர். அப்போது ஆர்வ மிகுதியில் சிறுவன் அப்துல்லா மபாஸ் மற்றும் அவரது சகோதரியுடன் கடலில் இறங்கி உற்சாகமாக குளித்து கொண்டிருந்தனர்.

### சகோதரி உயிருடன் மீட்பு

அப்போது கடலில் திடீரென்று ராட்சத அலை பயங்கர சத்தத்துடன் எழும்பி வந்தது. இதில் சிறுவன் மற்றும் சகோதரி 2 பேரும் சிக்கி கண் இமைக்கும் நேரத்தில் கடலில் உள்ளே இழுத்து சென்றது. அப்போது கடற்கரை பகுதியில் நின்று கொண்டிருந்த சிறுவனின் தாயார் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள் என்று அபய குரல் எழுப்பினார். இதை பார்த்து அருகில் நின்றவர்கள் சிறுவனை காப்பாற்ற முயன்றும் பலன் அளிக்கவில்லை. பின்னர் கடற்கரையில் நின்று கொண்டிருந்தவர்கள் அருகில் உள்ள போலீசார் மற்றும் நீச்சல் மீட்பு படையினருக்கு தகவல் கொடுத்தனர்.

அதன் பேரில் விரைந்து வந்த அவர்கள் கடலில் இறங்கி அலையில் சிக்கிய சிறுவனின் சகோதரியை உயிருடன் மீட்டு ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். தொடர்ந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட குழுவினர் சிறுவனின் உடலை பிணமாக கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இதுகுறித்து துபாய் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பலியான சிறுவனின் குடும்பத்தினர் தென்னிந்திய மாநிலமான கேரளாவைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பல ஆண்டுகளாக துபாயில் வசித்து வருவது குறிப்பிடத்தக்கது.




துபாயில் நடந்த நிகழ்ச்சியில் அமீரக உணவு வங்கியின் நிர்வாகக்குழு துணைத்தலைவர் தாவூத் அல் ஹாஜிரி அமீரக உணவு வங்கி திட்டப்பணிகளுக்கு ஆதரவு அளித்து வரும் நிறுவனங்களின் பிரதிநிதிகளை கவுரவித்தார். அதன் பின்னர் குழு புகைப்படம் எடுத்துக்கொண்ட காட்சி.

அமீரக உணவு வங்கி திட்டப்பணி:

# துபாயில், ஆதரவு அளித்து வரும் நிறுவனங்களை கவுரவிக்கும் நிகழ்ச்சி

துபாய், நவ.18-

துபாயில் அமீரக உணவு வங்கி திட்டப்பணிகளுக்கு ஆதரவு அளித்து வரும் நிறுவனங்களை கவுரவிக்கும் நிகழ்ச்சி நடந்தது.

### உணவு வங்கி

அமீரக அதிபராக இருந்த மேதகு ஷேக் கலீபா பின் ஜாயித் அல் நஹ்யான் வழிகாட்டுதல்படி கடந்த 2017-ம் ஆண்டு சமூக தொண்டு ஆண்டாக அறிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து அமீரகத்தின் அனைத்து பகுதிகளிலும் வசிக்கும் ஏழை, எளிய மக்களின் பசியை போக்க அமீரக துணை அதிபரும், துபாய் ஆட்சியாளருமான மேதகு ஷேக் முகம்மது பின் ராஷித் அல் மக்தூம் கடந்த 2017-ம் ஆண்டு ஜனவரி 4-ந் தேதி தனது முகம்மது பின் ராஷித் அல் மக்தூம் உலகளாவிய முயற்சிகள் திட்டத்தின் கீழ் உணவு வங்கிகளை அமீரக அரசு ஒத்துழைப்புடன் ஏற்படுத்த உத்தரவு பிறப்பித்தார். அதனை அடுத்து அதே ஆண்டு அக்டோபர் மாதம் லாபநோக்கம் இல்லாத அரசு அமைப்பாக இந்த உணவு வங்கி முதன் முதலில் துபாயில் அமைக்கப்பட்டது.

இந்த உணவு வங்கியின் தலைவராக துபாய் ஆட்சியாளரின் மனைவி ஷேக்கா ஹிந்த் பிந்த் மக்தூம் இருந்து வருகிறார். துபாயில் மாநகராட்சி பராமரிப்பு மற்றும் கண்காணிப்பில் கடந்த 2017-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் துபாய் அல் கூஸ் பகுதியில் உள்ள அல் கலீல் சாலையில் அமீரகத்தின் முதல் உணவு வங்கி திறக்கப்பட்டது. இதனை அன்றைய மாநகராட்சி பொது இயக்குனர் நாசர் அல் லூத்தா திறந்து வைத்தார். அதனை தொடர்ந்து அதே ஆண்டு அக்டோபர் மாதத்தில் முஹைஸ்னா பகுதியில் இந்த உணவு வங்கி 3 முக்கிய நிலைகளில் செயல்படுகிறது. அவை உணவு சேகரிப்பு, சேமிப்பு கிடங்கில் பாதுகாப்பு மற்றும் வினியோகம் என்பதாகும்.

### தினமும் 90 ஆயிரம்

துபாயில் நடந்த நிகழ்ச்சியில் அமீரக உணவு வங்கியின் திட்டப்பணிகள் சிறப்புடன் நடைபெற ஆதரவு அளித்து வரும் நிறுவனங்களை கவுரவிக்கும் நிகழ்ச்சி நடந்தது. இந்த நிகழ்ச்சியானது ஷேக்கா ஹிந்த் ஆதரவுடன் நடத்தப்பட்டது. அமீரக உணவு வங்கியின் நிர்வாகக்குழு துணைத்தலைவர் தாவூத் அல் ஹாஜிரி பல்வேறு நிறுவனங்களுக்கு நினைவு பரிசு வழங்கி கவுரவித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

அமீரக உணவு வங்கியின் பணிகள் ஒவ்வொரு ஆண்டும் சிறப்புடன் நடந்து வருகிறது. நடப்பு ஆண்டின் முதல் 9 மாதங்களில் இந்த உணவு வங்கியின் மூலம் 2 கோடியே 45 லட்சத்து 86 ஆயிரத்து 367 உணவுப்பொட்டலங்கள் வினியோகம் செய்யப்பட்டது. இது கடந்த ஆண்டை விட 93 சதவீதம் அதிகம் ஆகும். தினமும் 90 ஆயிரத்துக்கும் அதிகமான உணவுப் பொட்டலங்கள் வினியோகிக்கப்பட்டது.

### விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

மேலும் உணவை வீணாக்காமல் தடுப்பது தொடர்பாக தொழிலாளர்கள் உள்ளிட்ட சமூகத்தில் பல்வேறு நபர்களிடம் 150 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இந்த ஆண்டில் நடத்தப்பட்டது. இதன் மூலம் 3 ஆயிரத்து 437 பேர் பயனடைந்தனர். நடப்பு ஆண்டின் ரமலான் மாதத்தில் 50 லட்சம் உணவுப்பொட்டலங்கள் வினியோகிக்க திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இதன் காரணமாக 73 லட்சத்துக்கும் மேற்பட்ட உணவுப்பொருட்கள் வினியோகிக்கப்பட்டது. துபாய் ஜபீல் பூங்காவில் தினமும் 5 ஆயிரத்து 500 பேருக்கு நோன்பு திறக்கும் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## சார்ஜா சர்வதேச புத்தக கண்காட்சி




சார்ஜாவில் நடந்த 43-வது சர்வதேச புத்தக கண்காட்சியில் தமிழக மாணவி சஜினி வரதராஜன் எழுதிய தனது 25-வது புத்தகமான 'கைல்லியின் உலகம் 2024' என்ற பிரெஞ்சு மொழி புத்தகத்தை வெளியிட்டபோது எடுத்த படம். அருகில் அவரது பெற்றோர் வரதராஜன் மற்றும் ராதிகா, பிரெஞ்சு மொழி ஆசிரியர் சரண்யா முருகேசன், கல்லிடைக்குறிச்சி முனைவர் ஆ.முகமது முகைதீன் ஆகியோர் உள்ளனர். சஜினி ஆங்கிலத்தில் 23 புத்தகங்களையும், அரபியில் ஒரு புத்தகத்தையும் மற்றும் பிரெஞ்சு மொழியில் ஒரு புத்தகத்தையும் எழுதியுள்ளார்.



சார்ஜாவில் நடந்த புத்தக கண்காட்சியில் இடம் பெற்றுள்ள சார்ஜா போலீஸ் அரங்கை பார்வையிட்ட வாழ்வியல் ஆலோசகர் டாக்டர் குமாருக்கு போலீஸ் அதிகாரிகள் நினைவு பரிசு வழங்கி கவுரவித்தபோது எடுத்த படம்.




சார்ஜா 43-வது சர்வதேச புத்தக கண்காட்சியை பார்வையிட தமிழ்நாடு அரசின் தமிழ் இணைய கல்வி கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட கற்றல் கல்வி மையத்தை சேர்ந்த மாணவர்களும், ஆசிரியர்களும் சிறப்பு வருகை புரிந்தனர். கண்காட்சியில் அமைக்கப்பட்டிருந்த தமிழ் பதிப்பக அரங்குகளை ஆர்வத்துடன் பார்வையிட்ட குழுவினர், புத்தகங்களை வாங்கியபோது எடுத்த படம்.




சார்ஜா சர்வதேச புத்தக கண்காட்சியில் உள்ள அரங்கில் தமிழகத்தை சேர்ந்த பஜிலா நிஜாமுதீன் எழுதிய 'தி பிளாட் பிரின்சஸ்' என்ற ஆங்கில நாவல் புத்தகத்தை ஈடிஏ அஸ்கான் குழுமத்தின் மனிதவளத்துறை முன்னாள் அதிகாரி அக்பர் கான் வெளியிட நூலாசிரியர் பெற்றுக்கொண்ட போது எடுத்த படம். அருகில் அவரது பெற்றோர் நிஜாமுதீன், பாரிசா உள்ளிட்டோர் உள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல்:

# மலேசிய நபருக்கு ஆயுள் தண்டனை

### துபாய் கோர்ட்டு பரபரப்பு தீர்ப்பு

துபாய், நவ.18-

துபாய்க்கு பெல்ஜியம் நாட்டிலிருந்து ஒரு சரக்கு கப்பல் கடந்த 2023-ம் ஆண்டு வந்தது. இந்த கப்பலில் போதைப்பொருள் கடத்துவதாக துபாய் சுங்கத்துறை அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதனையடுத்து அந்த கப்பலை சோதனை செய்தபோது கெட்டமைன் என்ற போதைப்பொருள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதேபோன்று இந்த ஆண்டின் பிப்ரவரி மாதத்தில் வந்த சரக்கு கப்பலிலும் போதைப்பொருள் கடத்தப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த 2 கடத்தலிலும் 47 வயதான மலேசியாவை சேர்ந்த நபர் ஈடுபட்டது தெரியவந்தது.

இதனை தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கை விசாரித்த கோர்ட்டு அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கி தீர்ப்பளித்தது. மேலும் 20 ஆயிரம் திர்ஹாம் அபராதம் விதித்து உத்தரவிட்டது. தொடர்ந்து தண்டனை காலம் முடிந்ததும் அவரை நாடு கடத்த உத்தரவிட்டது.

## இன்றைய நிகழ்ச்சி

★ சார்ஜா வடிவெழுத்து சர்வதேச கண்காட்சி; இடம்-வடிவெழுத்து சதுக்கம், சார்ஜா. நேரம்-காலை 9 மணி.

★ குளோபல் வில்லேஜ் கண்காட்சி; இடம்-துபாய் லேண்ட் அருகில், ஷேக் முகம்மது பின் ஜாயித் சாலை, துபாய். நேரம்-மாலை 4 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை.

★ முகலாயர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட நகைகள் தொடர்பான மெய்நிகர் கண்காட்சி; இடம்-இஸ்லாமிய நாகரிக அருங்காட்சியகம், சார்ஜா. நேரம்-காலை 9 மணி.

★ தபால்துறை பயன்பாட்டுக்கு வரும் முன்னர் அரசர்களுக்கு இடையே நடந்த கடித போக்குவரத்து தொடர்பான கண்காட்சி; இடம்-பைத் ஷேக் சயீத் பின் ஹமத் அல் காசிமி அருங்காட்சியகம், சார்ஜா. நேரம்-காலை 9 மணி.

★ அமீரக பாரம்பரியம் தொடர்பான கண்காட்சி; இடம்-சார்ஜா பாரம்பரிய அருங்காட்சியகம், சார்ஜா. நேரம்-காலை 9 மணி.

★ ஷேக் ஜாயித் திருவிழா; இடம்-அல் வத்பா, அபுதாபி. நேரம்-மாலை 4 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை.

# துபாயில், 4 பகுதிகளில் உட்புற சாலை மேம்பாட்டு பணிகள்

## அதிகாரி தகவல்




நாத் ஹெஸ்ஸா பகுதி சாலை தோற்றத்தை படத்தில் காணலாம்.

துபாய், நவ.18-

துபாய் நாத் ஹெஸ்ஸா உள்பட 4 பகுதிகளில் உள்ள சாலைகளில் உட்புற சாலை மேம்பாட்டு பணிகள் தொடங்கப்படும் என்று துபாய் சாலை, போக்குவரத்து ஆணையத்தின் பொது இயக்குனர் மத்தார் அல் தயார் தெரிவித்தார்.



இது குறித்து அவர் கூறியதாவது:-

### சாலை மேம்பாட்டு திட்டங்கள்

துபாயில் பல்வேறு பகுதிகளிலும் வசித்து வரும் பொது மக்கள் எளிதில் பயணம் செய்யும் வகையில் சாலை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது. அதிகரித்து வரும் தேவையை கருத்தில் கொண்டு குடியிருப்பு பகுதிகளில் உட்புற சாலைகள் மேம்பாட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் துபாய் நாத் ஹெஸ்ஸா, வர்சன் 4, ஹெஸ்ஸா கார்டன்ஸ், சிலிகன் ஓயசிஸ் ஆகிய 4 பகுதிகளிலும் உட்புற சாலை மேம்பாட்டு திட்டங்கள் மேற்கொள்ளப்பட இருக்கிறது. இந்த சாலை திட்டப்பணிகள் அனைத்தும் அமீரக துணை அதிபரும், பிரதமரும், துபாய் ஆட்சியாளருமான மேதகு ஷேக் முகம்மது பின் ராஷித் அல் மக்தூம் உள்ளிட்ட தலைவர்களின் வழிகாட்டுதலின் பேரில் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த சாலை மேம்பாட்டு திட்டப்பணிகளின் மூலம் நாத் ஹெஸ்ஸா உள்ளிட்ட 4 பகுதிகளில் இருந்தும் ஷேக் முகம்மது பின் ஜாயித் சாலை, எமிரேட்ஸ் சாலை, ஷேக் ஜாயித் பின் ஹம்தான் அல் நஹ்யான் சாலை, ஹெஸ்ஸா சாலை ஆகிய சாலைகளுக்கு செல்லும் வழிகள் எளிதாக்கப்படும்.

### 4 லட்சம் பேர்

இந்த உட்புற சாலை மேம்பாட்டு திட்டங்களின் மூலம் இந்த பகுதிகளுக்கு வரும் பொதுமக்கள் வழக்கமான நேரத்தில் இருந்து 50 சதவீதம் முதல் 80 சதவீதம் வரை பயண நேரம் குறையும். இந்த பகுதியில் 2 வழித்தட சாலைகள் மூலம் மணிக்கு 6 ஆயிரம் வாகனங்கள் பயணம் செய்யலாம். இதில், அல் அவிர் 1, அல் பர்சா தெற்கு மற்றும் வாதி அல் சபா 3 ஆகிய பகுதிகளில் இருந்தும் பொதுமக்கள் எளிதில் பயணிக்கலாம். இதனால் 3 லட்சத்துக்கும் அதிகமான பொதுமக்கள் பயன்பெற முடியும்.

மேலும் ஷேக் முகம்மது பின் ஜாயித் சாலை சந்திப்பில் இருந்து ஷேக் ஜாயித் பின் ஹம்தான் அல் நஹ்யான் சாலை சந்திப்பு வரை உள்ள பகுதிகள் நாத் ஹெஸ்ஸா மற்றும் துபாய் சிலிகன் ஓயசிஸ் பகுதிகளுக்கு செல்லும் வகையில் ரவுண்டானாக்கள் அமைக்கப்படும். ஷேக் ஜாயித் பின் ஹம்தான் அல் நஹ்யான் சாலையில் போக்குவரத்து சீராக இயக்க சிக்னல் அமைக்கப்படும். இதனால் பயண நேரம் 138 வினாடிகளில் 80 சதவீதம் குறையும். இதில் 4 லட்சம் பேர் பயன் அடைவார்கள்.

### பயண நேரம் குறையும்

மேலும் அல் அவிர் 1 பகுதியில் இருந்து எமிரேட்ஸ் சாலையை இணைக்கும் 7.5 கிலோ மீட்டர் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் இப்பகுதியை சேர்ந்த 50 ஆயிரம் குடியிருப்பு வாசிகள் பயன் அடைவார்கள். தற்போது மணிக்கு செல்லும் 1,500 வாகனங்களில் இருந்து இருமடங்காக அதிகரிக்கும்.

அல் பர்சா தெற்கு பகுதியில் 75 ஆயிரம் பேர் பயன்பெறும் வகையில் 1,114 மீட்டர் சாலையும், வாதி அல் சபா 3 பகுதியில் 4 கிலோ மீட்டர் தூரத்துக்கும் சாலை பணிகள் நடைபெறும். இதனால் பயண நேரம் குறையும். விரைவில் இந்த சாலைப்பணிகள் தொடங்கப்பட்டு நிறைவடைய பணிகள் முடுக்கி விடப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## அமீரகத்தை சுற்றி...

### அபுதாபி

★ அபுதாபியில் அமீரக சகிப்புத்தன்மை மற்றும் சகவாழ்வுத்துறை மந்திரி ஷேக் நஹ்யான் பின் முபாரக் அல் நஹ்யான் உடன் எகிப்து நாட்டின் சமய விவகாரத்துறை மந்திரி ஒசாமா அல் அசாரி சந்தித்து பேசினார். அப்போது கலாசாரம் மற்றும் சமைய விவகாரத்துறையில் இரு தரப்பு ஒத்துழைப்பு உள்ளிட்ட முக்கிய கருத்துகள் குறித்து பேசப்பட்டது. இந்த சந்திப்பின் போது அமீரக இஸ்லாமிய விவகாரத்துறை பொது ஆணையத்தின் தலைவர் டாக்டர் ஒமர் ஹப்தூர் அல் தரெய் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.

### துபாய்

★ துபாய் முகம்மது பின் ராஷித் நூலகத்தில் 3 நாட்கள் நடந்து வந்த முதலாவது நூலக கருத்தரங்கு நேற்றுடன் நிறைவடைந்தது. இந்த கருத்தரங்கில் 27 நாடுகளைச் சேர்ந்த 70 பேச்சாளர்கள் பங்கேற்றனர். நூலகத்தின் முக்கியத்துவம், செயற்கை நுண்ணறிவை பயன்படுத்துவது தொடர்பான விஷயங்கள் குறித்து இந்த கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டது.

★ துபாய் அல் மம்சார் பகுதியில் அமைந்துள்ள கலாசாரம் மற்றும் அறிவியல் சங்க அரங்கில் இன்று (திங்கட்கிழமை) இரவு 7 மணிக்கு பொழுதுபோக்குக்காக சேகரித்த தபால்தலை, நாணயம் உள்பட பல்வேறு பொருட்கள் தொடர்பான கண்காட்சி தொடங்குகிறது என அந்த சங்கம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமீரகத்தின் பழமையை வெளிப்படுத்தும் வகையில் இது இருக்கும் என கூறப்பட்டுள்ளது.

### சார்ஜா

★ சார்ஜா எக்ஸ்போ சென்டரில் நடந்த 43-வது சர்வதேச புத்தக கண்காட்சியில் 'அஸ்மர்' என்ற சிறப்பு நிகழ்ச்சியில் சார்ஜா துணை ஆட்சியாளர் மற்றும் நிர்வாகக் குழுவின் துணைத் தலைவருமான ஷேக் சுல்தான் பின் அகமது பின் சுல்தான் அல் காசிமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இந்த நிகழ்ச்சியில் அரபு கவிதையின் சிறப்புகள் குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும் அரபு கவிஞர்கள் கவிதைகளை பாடினர்.

### ராசல் கைமா

★ ராசல் கைமாவில் அமீரகம், இத்தாலி ஆகிய இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகளை மேம்படுத்தும் வகையில் சிறப்பு விருந்து நிகழ்ச்சி நடந்தது. இந்த நிகழ்ச்சியில் ராசல் கைமா ஆட்சியாளர் மேதகு ஷேக் சவுத் பின் சகர் அல் காசிமி, அமீரக பொருளாதாரத்துறை மந்திரி அப்துல்லா பின் தூக் அல் மர்ரி, அமீரகத்துக்கான இத்தாலி நாட்டின் தூதர் லொரன்லோ பனாரா உள்ளிட்டோர் பங்கேற்றனர். அப்போது இரு நாட்டு உறவுகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

### மஸ்கட்

★ மஸ்கட்டில் ஓமன் நிதித்துறை மந்திரி சுல்தான் பின் சலேம் பின் சேட் அல் ஹப்சியை ஓமன் நாட்டுக்கான இந்திய தூதர் அமித் நாரங் சந்தித்து பேசினார். அப்போது பொருளாதாரம், நிதித்துறையில் இருதரப்பு ஒத்துழைப்பு உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் தொடர்பாக ஆலோசனை செய்யப்பட்டது.

தினத்தந்தி அமீரகப்பதிப்பில்
விளம்பரம் செய்ய மற்றும்
பிரதிகளுக்கு அழைக்கவும்
052 980 8299
055 860 8411